செ. கு. எண்: 272 நாள் :10.10.2013

# மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. செல்லூர் கே. ராஜு அவர்களின் அறிக்கை – 10.10.2013

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் பொற்கால ஆட்சியில், இந்தியாவிலேயே முதன் முறையாக, இந்திய அரசியல் சாசன 97வது சட்டத் திருத்தத்தின்படி கூட்டுறவுத் தேர்தல் ஆணையம் அமைத்து, தேர்தலை ஜனநாயக முறைப்படி நடத்தி நிர்வாகக் குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். ஆனால், தான் ஒரு சிறந்த நிர்வாகி என தனக்குத் தானே தம்பட்டம் அடித்துக் கொள்ளும் கருணாநிதியால், கடந்த 5 ஆண்டு கால மைனாரிட்டி திமுக ஆட்சியில் கூட்டுறவுத் தேர்தலை நடத்த முடியாமல் இருந்த கையாலாகாத்தனத்தை நாடே அறியும்.

1996 முதல் 2001 வரையிலான கருணாநிதியின் ஆட்சியில், தி.மு.க.வினர் கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகிகளாக பொறுப்பேற்று செயல்பட்ட காலத்தில், **"குரங்கு கையில் சிக்கிய பூமாலை போன்று"** கூட்டுறவு இயக்கத்தையே சின்னாபின்னப் படுத்திவிட்டார்கள். ஏழை எளிய விவசாயிகளுக்கு கிடைக்க வேண்டிய பயிர்க் கடன்களை தி.மு.க.வினரே சுருட்டி, கூட்டுறவுத் துறையையே பாழடித்து திவாலாக்கிவிட்டார்கள்.

ஆனால், தற்போது, **மாண்புமிகு முதலமைச்சர் அம்மா** அவர்களின் நிர்வாக திறமையினால் கூட்டுறவுத் துறையில் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளது. கருணாநிதியின் கடந்த 5 ஆண்டு கால மைனாரிட்டி திமுக ஆட்சியில் வழங்கிய பயிர்க் கடன்களின் மொத்த அளவு 9163.60 கோடி ரூபாய் மட்டுமே, ஆனால், **இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா** அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற இரண்டே ஆண்டில், கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் 9388.74 கோடி ரூபாய் அளவிற்கு விவசாயிகளுக்கு பயிர்க் கடன் வழங்கி சாதனை படைத்துள்ளார்கள். குறிப்பாக, 2012–13 ஆம் ஆண்டில் மட்டும் 10,20,845 விவசாயிகளுக்கு 4,069 கோடி ரூபாய் அளவிற்கு வட்டியில்லா பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளது. இது கூட்டுறவுத் துறையின் ஒரு சரித்திர சாதனையாகும்.

சிறு குறு விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு, விவசாயிகள் விளைவித்த பொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்கவேண்டும் என்பதற்காக, விளைந்த பொருட்களை பாதுகாக்க, இதுவரை இந்தியாவின் வேறு எந்த ஒரு மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு, கடந்த இரண்டே ஆண்டுகளில் 234.27 கோடி ரூபாய் மானியத்தில் 2270 கிடங்குகள் கட்டப்பட்டதோடு, இந்த ஆண்டும் 1024 கிடங்குகள் கட்டுவதற்கும் **மாண்புமிகு முதலமைச்சர் அம்மா** அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

அதுமட்டுமல்லாமல், 1128 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு, ஒரு சங்கத்திற்கு அதிகபட்சம் ரூ.20 இலட்சம் வீதம், 50 சதவிகித மானியத்தில், ரூ.80 கோடி அளவிற்கு விவசாய கருவிகள் வழங்கி, அவற்றை குறைந்த வாடகையில் விவசாயிகள் பயன்படுத்தி விவசாய பணிகளை

மேற்கொள்ள வழிவகை செய்தவர் **மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி இதய தெய்வம் அம்மா** அவர்கள் ஆவார்கள்.

டெல்டா விவசாயிகளின் துயர் துடைக்க, ரூ.1364 கோடி அளவிற்கு வறட்சி நிவாரணம் வழங்கியவர் **மாண்புமிகு அம்மா** அவர்கள். அதுவும் முதன் முதலாக, ஏக்கருக்கு ரூ.15000 வீதம் டெல்டா மாவட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கி விவசாயிகளின் காவல் தெய்வமாக **மாண்புமிகு முதலமைச்சர் அம்மா** அவர்கள் திகழ்ந்து வருகிறார்கள்.

விவசாயிகளுக்கு வழங்கிய கடன்களை, விவசாயிகளுக்கு கிடைக்க வேண்டிய தொகையை, உண்மையான விவசாயிகளுக்குக் கிடைக்க வழி செய்யாமல், தி.மு.க.வினரே கிடைக்க வழிவகை செய்தவர் தி.மு.க. தலைவர் கருணாநிதி. ஆனால், உண்மையான விவசாயிகளுக்கு பயிர்க் கடன் வழங்கி, அவர்களின் வயிற்றில் பால் வார்த்து அவர்களின் பாதுகவலராக விளங்கி வருபவர் **மாண்புமிகு முதலமைச்சர் அம்மா** அவர்கள் ஆவார்கள்.

**"தான் திருடி, பிறரை நம்பார்"** என்பது தமிழ் பழமொழி

கருணாநிதி, கூட்டுறவுத் துறையின் மூலமாக வழங்கப்படும் கடன்கள், தற்பொழுது கூட்டுறவுத் துறையில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நிர்வாக குழுவினர் மூலம் அ.தி.மு.க.வினருக்கு மட்டுமே வழங்குவதாக பொய் மூட்டைகளை அவதூறாக அவிழ்த்து விடுகிறார். ஆனால், நடப்பாண்டில் மட்டும் பல்லாயிரக்கணக்கான திமுகவினர் கடன் பெற்றுள்ளனர். அதற்கு சான்றாக ஒரு சில பெயரை மட்டும் இங்கே உதாரணமாக சுட்டிக்காட்ட விழைகிறேன்.

| **வ. எண்.** | **திமுகவினர் பெயர் மற்றும் பதவி** | **கடன் பெற்ற தொகை** |
|---|---|---|
| 1 | கமலக்கண்ணன்<br>வந்தவாசி தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், | ரூ.51,000<br>(செங்காடு தொ. வே. கூ. கடன் சங்கம்– ஜூன் 2013) |
| 2 | கே.பி.ராமசாமி<br>பெரணமல்லூர் ஒன்றிய முன்னாள் பெருந்தலைவர் | ரூ.1,00,000<br>(பெரணமல்லூர் தொ. வே. கூ. கடன் சங்கம்– ஜூலை 2013) |
| 3 | சி.ஹரி,<br>பெரணமல்லூர் நகர செயலாளர் | ரூ.25,800<br>(பெரணமல்லூர் தொ. வே. கூ. கடன் சங்கம்– ஜூலை 2013) |
| 4 | சென்னப்பன்<br>பாசூர் பேரூராட்சி கிளை செயலாளர் | ரூ.84,090<br>(பாசூர் தொ. வே. கூ. கடன் சங்கம்– ஜூன் 2013) |
| 5 | மு.சின்னசாமி<br>கொடுமுடி திமுக செயலாளர் | ரூ.61,250<br>(பாசூர் தொ. வே. கூ. கடன் சங்கம்– ஜூன் 2013) |

இவர்கள் எல்லாம் திமுகவை சார்ந்தவர்களா இல்லையா ? என்பதை கருணாநிதிதான் தெரிவிக்க வேண்டும். இது போன்று நிறைய தி.மு.க.வினர் பயிர்க் கடன் பெற்று இருக்கிறார்கள்.

பொய்யிலே பிறந்து, பொய்யிலே வளர்ந்த கருணாநிதி, விவசாயிகளுக்கு ரூ.7000 கோடி கடன் தள்ளுபடி செய்ததாக பொய்யும் புனைசுருட்டுகளையும் நாள்தோறும் அவிழ்த்துவிட்டு மக்களுக்கு மீண்டும் மீண்டும் தவறான தகவலை தெரிவித்து துரோகம் செய்து வருகிறார்.

விவசாயிகள் பெற்ற மொத்த கடன் அளவே ரூ.5369 கோடி தான்.

ஆனால், கருணாநிதி ஆட்சியில் கடன் தள்ளுபடி தொகை கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டதோ வெறும் ரூ.4863 கோடி மட்டும் தான். மீதமுள்ள தொகைய வழங்கியவர் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை கருணாநிதிக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். விவசாய கடன் தள்ளுபடி திட்டத்தில் பலனடைந்த தி.மு.க.வினரின் ஒரு சில பெயர்களை மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

| வ. எண். | திமுகவினர் பெயர் மற்றும் பதவி | கடன் தள்ளுபடி பெற்ற தொகை |
|---|---|---|
| 1 | அழகு சுந்தரம் மற்றும் அவரது மகன் அழகு திருநாவுக்கரசு | ரூ.1916702 |
| 2 | சுப்ரமண்யம், அவர் தம்பி வெங்கடாசலம் | ரூ.1584750 |
| 3 | கடலூர் தொ.வே.கூ.க. சங்கம் திமுக உறுப்பினர் ஆறுமுகம் | ரூ.2389205 |

மேலும், இதுபோன்று பல்லாயிரக்கணக்கான திமுகவினர் பயனடைந்துள்ளார்கள். எனவே, இனிமேல் கருணாநிதியோ, கருணாநிதி கட்சிகாரர்களோ ரூ.7000 கோடி கடன் தள்ளுபடி செய்துவிட்டோம் என்று தம்பட்டம் அடிப்பதை நிறுத்திவிட்டு, செய்த தவறை இனியாவது திருத்திக்கொள்ள வேண்டும்.

சமூக நீதி காத்த வீராங்கணை **மாண்புமிகு முதலமைச்சர் அம்மா** அவர்களுடைய ஆட்சியில், ஆதி திராவிடர், பழங்குடியினர், மகளிர் சுய உதவிக் குழுவினர் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு இதுவரை கடனாக வழங்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.250/—ஐ ரூ.2,500 ஆக உயர்த்தி அதையும் மானியமாகவே வழங்கியதன் மூலம் அவர்கள் ரூ.25,000 முதல் ரூ.50,000 வரை கடன்பெற தகுதி உடையவர்களாக ஆக்கப்பட்டுள்ளார்கள். இச்சலுகையை இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலமும் செய்ததில்லை. மேலும், மாற்றுத் திறனாளிகளுக்கு வட்டியில்லா கடன் வழங்கும் ஒரே மாநிலம் இந்தியாவில் தமிழ்நாடு மட்டுமே.

**மாண்புமிகு முதலமைச்சர் அம்மா** அவர்களின் ஆட்சியில் பல்வேறு சாதனைகளை கூட்டுறவுத் துறை நிகழ்த்தி வருகிறது. இந்தியாவிற்கே வழிகாட்டியாக கணினிமயமாக்குதல், நவீனமயமாக்குதல் போன்ற சாதனைகளை படைத்து, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் முதல் மாவட்ட மற்றும் மாநில வங்கிகள் வரை அகில இந்திய அளவில், முதல் பரிசினை பெற்று சிறப்பாக செயல்பட்டு மக்கள் பணி ஆற்றி வருகின்றன.

இப்படி சிறப்பாக மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் மக்கள் பணியாற்றி வரும் கூட்டுறவுத் துறையை குறை கூறுவதற்கு "ஸ்பெக்ட்ரம் ஊழல் புகழ்" கருணாநிதிக்கோ

அவரது குடும்பத்தினருக்கோ, கருணாநிதி கட்சிக்கோ எந்த அறுகதையும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மத்திய இரசாயன உரத் துறை அமைச்சராக இருந்து உர விலையை ஏற்றி மானியத்தை குறைத்து விவசாயிகளின் வயிற்றிலே அடித்து அவர்களின் வயிற்றெரிச்சலைப் பெற்றுக் கொண்ட மு.க. அழகிரியின் தந்தை கருணாநிதிக்கு விவசாயிகள் நலன்பற்றி பேச எந்த அருகதையும் இல்லை.

கருணாநிதியின் மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்தில் செய்த தில்லுமுல்லுகளால், கூட்டுறவுத் துறையே பாழ்பட்டு, திவாலான சூழ்நிலையில், மக்கள் கூட்டுறவு அமைப்புகள் மீதும், வங்கிகள் மீதும் நம்பிக்கை இழந்திருந்தார்கள். அவர்களுடைய காலத்தில், அதாவது **31.3.2009**ல் கூட்டுறவு வங்கிகளின் மொத்த வைப்பீட்டு தொகை வெறும் ரூ.**20,119** கோடி மட்டுமே. ஆனால், **மாண்புமிகு அம்மா** அவர்கள் ஆட்சி பொறுப்பேற்ற பிறகு செய்த பல்வேறு எழுச்சிமிக்க திட்டங்களால் தமிழக மக்களும், சிறு, குறு விவசாயிகளும், தொழில் முனைவோரும் கூட்டுறவு அமைப்புகள் மீது கொண்ட நம்பிக்கையின் காரணமாக இன்றைக்கு **31.3.2013**ல் ரூ.**36,918** கோடி அதாவது ரூ.**16,799** கோடி அளவிற்கு அதிகமாக வைப்பீடுகளை வைத்துள்ளனர்.

கருணாநிதியை அவரது குடும்பத்தினரே நம்பவில்லை. நாட்டு மக்களும் நம்பப் போவதில்லை. தேர்தலுக்காக வேஷம் போடும் கருணாநிதியின் முகத்தில் கரி பூசப்படும் நாள் வெகு தூரத்தில் இல்லை என்பதையும், கருணாநிதி மற்றும் அவரது குடும்பம் அரசியலிலிருந்து அறவே அப்புறப்படுத்தப்படுவது உறுதி என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

செல்லூர் கே. ராஜு
கூட்டுறவுத் துறை அமைச்சர்

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**